

# “இந்தியாவுக்கே முன்மாதிரி இயக்கம் தி.மு.க.தான்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஆறாவது அமர்வில் ‘பெயர் தந்ததும், உயிரானதும் கழகமே!’ என்னும் தலைப்பில், கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தா.மீ.ந.தீபக் அவர்கள் ஆற்றிய உரை :**



பேராசிரியர் தா.மீ.ந.தீபக், மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர்

“என்னை உட்கார்ந்துகொண்டு பேசச் சொன்னார்கள், இல்லை, இல்லை நான் நின்றுகொண்டுதான் பேசுவேன்’ என்று சொன்னேன். இதை என்னுடைய முதல் சவாலாகப் பார்க்கிறேன்.

அறிவுத் திருவிழாவில், ஒரு மாற்றுத்திறனாளி பேசுவது என்பது சாலப் பொருத்தம் வாய்ந்த ஒன்று. ஏனென்றால், மாற்றுத்திறனாளிகளோடு பணிபுரிவது என்பது மனது தொடர்பான வேலையாக இந்த உலகம் எண்ணிக்கொண்டிருக்கையில், அது அறிவார்ந்த வேலை என்பதைப் புரிய வைப்பதற்காகத்தான், இந்த இடத்திலே மாற்றுத்திறனாளியாகிய என்னைப் பேச வைத்திருக்கிறார்கள்.



### அறிவை வலியுறுத்திய வள்ளுவம்

‘பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி’ என்கிறது திருக்குறள்.

பொறியின்மை என்றால், உடலிலே ஏதோ ஓர் அங்கமோ, அங்கத்தினுடைய செயல்பாடோ குறைவாக இருப்பது. இந்தக் குறைபாடோ, அதோடு பிறப்பதோ உன் தவறு இல்லை. அது உன் அப்பா அம்மா செய்த தவறும் இல்லை, நீ முன் பிறவியில் செய்த தவறும் இல்லை, அது யாருடைய தவறும் இல்லை. அது இயற்கையின் ஒரு பகுதிதான் என்பதை அறிவு கொண்டு பார் என்று சொன்னவர், வள்ளுவப் பெருந்தகை. அந்த வள்ளுவரின் பெயரில் இருக்கக்கூடிய இந்த வள்ளுவர் கோட்டம் புதுப்பிக்கப்பட்டு, முதலில் நடந்ததும் மாற்றுத்திறனாளிகளுக்கான நிகழ்ச்சிதான்.

### யார் மாற்றுத்திறனாளி?

டிஸ் எபிலிட்டி (Disability) என்றால், மூன்றாயிரம் விதமான டிஸ் எபிலிட்டிகள் (Disability) இருக்கின்றன. அவர்களின் பிரதிநிதியாகத்தான் நான் இங்கே பேசுகிறேன். இந்த அரங்கத்தில் இருக்கக்கூடிய அனைவரையும் பார்த்து, நான் ஒரு கேள்வி கேட்கிறேன், இங்கே யார் மாற்றுத்திறனாளி? ‘தீபக் போன்றவர்கள்தான் மாற்றுத்திறனாளி. நாமெல்லாம் நார்மல் ஆனவர்கள்’ என்றுதான் பலரும் நினைத்திருப்பார்கள்.

உங்களிடம் இன்னொரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். இந்த அமர்வுக்குத் தலைமை தாங்கும் மதிப்புக்குரிய ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள் காது கேட்க முடியாதோர் பள்ளிக்கு சிறப்பு விருந்தினராகச் செல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அங்கேயிருக்கும் குழந்தைகளிடம் அவர் எப்படி பேசுவார்? சைகை மொழியில்தான் பேசுவார். அப்போது யார் அங்கே மாற்றுத்திறனாளி? அங்கே ஒரு தரப்புக்கு காது கேட்காது. இன்னொரு தரப்புக்கு காது கேட்டாலும், மற்றொரு தரப்புக்காக காது கேளாதவராக மாறுகிறார்.

### கலைஞரின் அறிவார்ந்த செயல்

இன்னோர் உதாரணம் சொல்கிறேன். இதே பன்னீர்செல்வம் அவர்கள் ஒடிசா செல்கிறார். அங்கே ஒரு ரயில்நிலையத்தில் மாட்டிக்கொள்கிறார். கடும் பசி. அங்கே பழம் விற்றுக்கொண்டிருக்கும் மூதாட்டிக்கு ஒரிய மொழி மட்டும்தான் தெரியும். பன்னீர்செல்வன் அவர்களுக்கோ ஒரிய மொழி தெரியாது. ‘பழம் வேண்டும்’ என்பதை எப்படி சொல்வார்? சைகை மொழியில்தான் சொல்வார். இங்கே பழம் விற்கும் மூதாட்டி, பன்னீர்செல்வம் அவர்கள் இருவருமே மாற்றுத்திறனாளி இல்லை என்றாலும், அங்கே மொழி பயனற்றுப்போகிறது. எனவே, டிஸ் எபிலிட்டி (Disability) என்பது சூழலைப் பொறுத்துதான்.

டிஸ் எபிலிட்டி (Disability) என்பது பெரும்பான்மையினர் பார்வையில் உருவாகும் விஷயம். அதை இயலாமை என்று தமிழில் மொழிபெயர்க்காமல் உங்களுக்கு இல்லாத மாற்று அம்சங்களைச் செய்யும் திறன் வாய்ந்தவர்கள் என்ற பொருளில் கலைஞர் ‘மாற்றுத்திறனாளிகள்’ என்ற சொல்லை உருவாக்கினார். இதுதான் அறிவார்ந்த செயல்.

### வரலாற்றுத் தொடர்ச்சி

எனக்கு முன்னால் பேசிய எழுத்தாளர் மதிவண்ணன் என் ஆதர்சங்களில் ஒருவர். அவர் கல்வெட்டுகளைப் பற்றிப் பேசினார்.

பழந்தமிழர்கள் பார்வையில் எப்படி மாற்றுத்திறனாளிகள் இருந்திருக்கிறார்கள் என்று செம்மொழி மாநாட்டில் குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார். பராந்தகச் சோழன் பார்வையற்ற 18 பேரை திருக்கோயில்களில் இறைவன் மீது பாட்டு பாடுவதற்காக நியமித்ததுடன் அவர்களுக்கு ‘கண் காட்டுவார்’ என்று பெயர் சூட்டியதாக அவர் கூறினார். பராந்தகச் சோழனுக்குப் பிறகு, ‘மாற்றுத்திறனாளிகள்’ என்ற நேர்மறையான சொல்லை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்தான்.

### பகுத்தறிவும் சுயமரியாதையும்

பகுத்தறிவு குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். ‘வலதுகாலை எடுத்து வைத்து வா’ என்கிறார்கள். இடது காலை ஊன்றாமல் எப்படி வலதுகாலை எடுத்து வைக்க முடியும்? இடதுகை, இடதுகால் என்பது தவறு, வலதுகை, வலதுகால்தான் புனிதம் என்னும் நம்பிக்கையில் இருந்துதான் இந்த சிந்தனை பிறக்கிறது. இதைக் கேள்விக் குள்ளாக்குவதுதான் பகுத்தறிவு. அதேபோல்தான் ஹேண்டி கேப் (Handicap) என்று ஒதுக்கிவைப்பதை மறுத்து மாற்றுத்திறனாளி என்னும் வார்த்தையை உருவாக்கியது திராவிட இயக்கம். ‘மாற்றுத்திறனாளி’ என்பது சுயமரியாதையின் தொடக்கம். நான் இந்த மேடையில் பேசுவது என்பதே ஒரு சகாப்த மாற்றம். மாற்றுத்திறனாளிகள் அணி என்பதை திராவிட முன்னேற்றக் கழகம்தான் வரலாற்றிலேயே முதன்முதலாக உருவாக்கியிருக்கிறார்கள்.

மாற்றுத்திறனாளிகளாகிய நாங்கள், தலைவர் கலைஞர் அவர்களை அறிவாலயத்தில் சென்று பார்க்கப் போகிறோம். நான் 1980களில் பிறந்தவன். கலைஞரை அண்ணாந்து பார்த்து வளர்ந்தவன். அறிவாலயத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் வீல் சேரில் அமர்ந்து கொண்டு ஒரு வார்த்தை சொன்னார். அதை நான் சாகின்ற வரை மறக்க முடியாது. ‘நானும் உங்களைப் போல் ஒரு மாற்றுத்திறனாளிதான்’ என்றார் கலைஞர். யாரும் அவ்வளவு எளிதாக அதைச் சொல்லிவிட மாட்டார்கள். ஐந்து முறை முதலமைச்சராக இருந்திருக்கிறார். எழுதாத எழுத்து கிடையாது. பேசாத விஷயம் கிடையாது. செய்யாத சாதனை கிடையாது. அப்படிப்பட்ட மகத்தான ஆளுமை தன்னை மாற்றுத்திறனாளி என்றார்.

என்னைப் போன்றவர்கள் மனதுக்குள் என்ன நினைக்கிறோமோ, அதைப் புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் தலைவர் கலைஞருக்கு உண்டு. சுயமரியாதை என்பதுதான் மாற்றுத்திறனாளிகளுடைய அடையாளம். யாராவது எங்கள் உடல் குறைபாட்டைச் சொல்லித் திட்டினால் எங்களுக்கு கோபம் வரும். அது சுயமரியாதைக் கோபம். இதைப் புரிந்துகொண்டவர் கலைஞர். அதனால்தான் அவர் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துறையை உருவாக்கினார். தெற்காசியாவிலேயே நாம்தான் முதலில் செய்திருக்கிறோம். அதைச் செய்தவர் கலைஞர். ‘இளைஞன்’ என்ற திரைப்படத்துக்கு, தான் எழுதிய திரைக்கதை - வசனத்தின் மூலம் கிடைத்த தொகையை மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்துக்கு அளித்தவர் கலைஞர்.

### முன்மாதிரி ஆட்சி

இந்தத் திராவிட மாடல் ஆட்சியில் மட்டும் மாற்றுத்திறனாளிகளின் நலன்களை முன்னிறுத்தி அறுபது அரசு உத்தரவுகள் வந்திருக்கின்றன.

மன வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தையைப் பொறுத்தவரை, ஒவ்வொரு வருடமும் அந்தக் குழந்தை உயிரோடு இருக்கிறதா என்பதற்கான சான்றிதழ் வாங்கிக் கொடுத்தால்தான் அந்தக் குழந்தைக்கு உதவித்தொகை கிடைக்கும். அந்தத் திட்டத்தை ரத்து செய்திருக்கிறது இந்தத் திராவிட மாடல் அரசு. இந்த உத்தரவு இந்தியாவிலேயே முதலில் தமிழ்நாட்டில்தான் போடப்பட்டிருக்கிறது.

நம் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் பேசிய முதல் உரையிலேயே ‘மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் இருக்கக்கூடிய இடத்திலேயே உள்ளாட்சிகளில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்’ என்று வலியுறுத்தினார். இப்போது நம் முதலமைச்சர் அவர்கள் அதைச் சாத்தியமாக்கி யிருக்கிறார்.

நான் சமீபத்தில் கோவாவுக்குச் சென்றிருந்தேன். அப்போது அந்த மாநிலத்தைச் சேர்ந்த பா.ஜ.க. அமைச்சர், ‘இந்தியாவிலேயே முதன்முதலாக மாற்றுத்திறனாளிகளுக்குப் பிரதிநிதித்துவத்தை உங்கள் அரசுதான் அளித்திருக்கிறது. நானும் இதைப் பின்பற்றச் சொல்லி எங்கள் முதலமைச்சரிடம் பேசுகிறேன்’ என்றார். இப்படி இந்தியாவுக்கே முன்மாதிரியாகத் திகழ்கிறது திராவிட மாடல் அரசு.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வழியில் மாற்றுத்திறனாளி களின் நலன் குறித்து சிந்திப்பவர் இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். கடல்நீரில் கால் நனைப்பது உங்களுக்கு எல்லாம் சாதாரணமான விஷயம். ஆனால், நான் 38-வது வயதில்தான் கடல் நீரில் கால்வைக்க முடிந்தது. அதற்கான மரப்பாதையை உருவாக்கி, அதைச் சாத்தியப் படுத்தியவர் உதயநிதி அவர்கள்.

எங்களைப் பார்த்து பரிதாபப்படாமல், எங்களைப் புரிந்துகொண்டு எங்கள் குரலாக இளைஞர் அணி தோழர்கள், இளம் பேச்சாளர்கள் இருப் பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் கலைநிகழ்ச்சிகளும் முற்போக்குச் சிந்தனையாளர் உரைகளும் வள்ளுவர் கோட்டத் தேர் பின்னணியில் நடைபெற்றதைப் பலரும் பாராட்டினார்கள். ‘திராவிடப் பெருஞ்சுவர்’ என்னும் முகநூல் பக்கத்தின் பதிவு :**

‘வள்ளுவர் கோட்ட தேரின் முன் அண்ணன் ஆளூர் ஷாநவாஸ் அவர்கள் உரையாற்றிய படத்தைப் பார்த்தேன்.

இந்தப் படத்தைப் போல ஒரு ஃபிரேமை, தமிழ்நாட்டில் உருவாக்க தி.மு.க. போல, அண்ணா போல, கலைஞர் போல, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் போல, உதயநிதி ஸ்டாலின் போல உழைக்க வேண்டும். இந்தப் படம் காட்டும் திராவிடர் பண்பாட்டு அரசியல், தமிழர் அற அரசியல் புரிந்தவர்களுக்கு மேற்சொன்னதும் புரியும்!’